# 08

# ஐங்காலத் தொழுகையைத் தொடர்ந்து ஓதும் ஓதல்கள்



தொழுகை ஒவ்வொரு முஸ்லிமும் நிறைவேற்ற வேண்டிய பிரதான கடமை என்பதை நாமறிவோம். இத்தொழுகையைத் தொடர்ந்து நபி ﷺ அவர்கள் சில அவ்ராதுகளை வழமையாக ஓதி வந்துள்ளார்கள். அவற்றை நாமும் ஓதி வரவேண்டும். அவற்றைப் பொருளறிந்து ஓதுவதன் மூலம் முழுமையான பயனை அடைந்து கொள்ள முடியும்.

## இஸ்தி.ஃ.பார்

اَسْتَغْفِرُ اللهَ : நான் அல்லாஹ்விடம் பிழை பொறுக்கத் தேடுகிறேன் (மூன்று முறை)

اَللّٰهُمَّ اَنْتَ السَّلاَمُ وَمِنْكَ السَّلاَمُ تَبَارَكْتَ يَاذَا الْجَلاَلِ وَالإِكْرَامِ

யா அல்லாஹ்! நீ சாந்தியுள்ளவன். உன்னிடமிருந்தே சாந்தி கிடைக்கும். சங்கையும் மகத்துவமும் உடையவனே நீ உயர்ச்சியுடையவனாயுள்ளாய். (நூல் முஸ்லிம்)

## அவ்ராத்

لاَ اِلٰهَ اِلاَّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيْكَ لَهُ لَهُ الْمُلْكُ وَلَهُ الْحَمْدُ

وَهُوَ عَلٰى كُلِّ شَيْئٍ قَدِيْرٌ

அல்லாஹ்வன்றி வணக்கத்துக்குரிய நாயன் வேறில்லை. அவன் தனித்தவன், அவனுக்கு இணையில்லை, ஆட்சியுரிமை அவனுடையது எல்லாப் புகழும் அவனுக்குரியது. அவன் அனைத்தின் மீதும் சக்தி உள்ளவன்.

''ம.்.ரிப், சுபஹ் தொழுகைகளுக்குப் பின்னர் முஹம்மத் ﷺ அவர்கள் கலிமா தௌஹீதை பத்து முறை ஓதி வந்துள்ளார்கள். இவ்விதம் ஓதுவோருக்கு பத்து நன்மைகள் எழுதப்படும். பத்து பாவங்கள் மன்னிக்கப்படும். பத்து அந்தஸ்துகள் உயர்த்தப்படும். மேலும் அன்றைய தினம் எல்லாத் தீமைகளிலிருந்தும் பாதுகாக்கப்படுவார். மேலும் ஷைத்தானின் தீங்குகளை விட்டும் அவர் பாதுகாப்புப் பெறுவார்'' (ஆதாரம்: அஹ்மத்)

اَللّٰهُمَّ لاَ مَانِعَ لِمَا اَعْطَيْتَ وَلاَ مُعْطِيَ لِمَا مَنَعْتَ وَلاَ يَنْفَعُ ذَا الْجَدِّ مِنْكَ الْجَدُّ

அல்லாஹ்வே நீ கொடுத்ததைத் தடுப்பவரில்லை. நீ தடுத்ததைக் கொடுப்பவர் இல்லை. உன்னிடமே முழுச் செல்வாக்கும் உள்ளது. உன்னையன்றி எவருடைய செல்வாக்கும் பயனளிக்காது.

لاَ حَوْلَ وَلاَ قُوَّةَ إلاَّ بِاللهِ

நன்மை புரிவதற்கோ தீமையை விடுவதற்கோ அல்லாஹ்வின் உதவியின்றி முடியாது.

لاَ اِلَهَ إلاَّ اللهُ وَلاَ نَعْبُدُ إلاَّ إيَّاهُ لَهُ النِّعْمَةُ وَلَهُ الْفَضْلُ وَلَهُ الثَّنَاءُ الْحَسَنُ

அலலாஹவனறி வணககததுககுரிய நாயன இலலை. நாம அவனனறி வேறு யாரையும் வணங்க மாட்டோம். அவனிடமே அருட்கொடையுண்டு. இன்னும் அவனுக்கே சிறப்பும் அழகிய புகழும் உள்ளன.

لاَ إلَهَ إلاَّ اللهُ مُخْلِصِيْنَ لَهُ الدِّيْنَ وَلَوْ كَرِهَ الْكَافِرُوْنَ

''அல்லாஹ்வன்றி வணக்கத்துக்குரிய நாயன் இல்லை. நிராகரிப்போர் வெறுத்த போதிலும் அவனுக்கே உரிய மார்க்கத்தை மனத் தூய்மையுடன் பின்பற்றுவோம்.

**ஆயதுல் குர்ஸியை ஒவ்வொரு தொழுகைக்குப் பின்னரும் ஓதுவோம்.**

''யார் ஒவ்வொரு தொழுகைக்குப் பின்னரும் ஆயதுல் குர்ஸியை ஓதி வருகிறாரோ அவர் சுவனம் செல்வதை அவரது மரணமேயன்றி வேறு எதுவும் தடுக்காது'' (நஸஈ, தப்ரானி)

''ஒருவர் பர்ளான தொழுகைக்குப் பின் ஆயதுல் குர்ஸியை ஓதினால் அடுத்த தொழுகைவரை அவர் அல்லாஹ்வின் பாதுகாப்பிலேயே இருப்பார்'' (தப்ரானி).

ٱللَّهُ لَآ إِلَٰهَ إِلَّا هُوَ
ٱلْحَىُّ ٱلْقَيُّومُ ۚ لَا تَأْخُذُهُۥ سِنَةٌ وَلَا نَوْمٌ ۚ لَّهُۥ مَا فِى ٱلسَّمَٰوَٰتِ وَمَا
فِى ٱلْأَرْضِ ۗ مَن ذَا ٱلَّذِى يَشْفَعُ عِندَهُۥٓ إِلَّا بِإِذْنِهِۦ ۚ يَعْلَمُ مَا بَيْنَ
أَيْدِيهِمْ وَمَا خَلْفَهُمْ ۖ وَلَا يُحِيطُونَ بِشَىْءٍ مِّنْ عِلْمِهِۦٓ إِلَّا بِمَا
شَآءَ ۚ وَسِعَ كُرْسِيُّهُ ٱلسَّمَٰوَٰتِ وَٱلْأَرْضَ ۖ وَلَا يَـُٔودُهُۥ حِفْظُهُمَا ۚ
وَهُوَ ٱلْعَلِىُّ ٱلْعَظِيمُ ٢٥٥

''அல்லாஹ், அவனன்றி வேறு நாயன் இல்லை. அவன் நித்திய ஜீவன், நிலையானவன், அவனை உறக்கமும் நித்திரையும் பீடிக்காது. வானங்களில் பூமியில் உள்ள அனைத்தும் அவனுடையவை. அவனது அனுமதியின்றி அவனிடம் யார்தான் பரிந்து பேச முடியும். அவர்களுக்கு முன்னுள்ளவற்றையும் அவர்களுக்குப் பின்னாலுள்ளவற்றையும் அவன் அறிவான். அவனது நாட்டமின்றி அவனுடைய அறிவிலிருக்கும் யாதொன்றையும் (மற்றெவரும் தங்கள் அறிவால்) அறிந்து கொள்ள முடியாது. அவனுடைய அரசாட்சி வானங்களிலும் பூமியிலும் பரவியிருக்கிறது. அவ்விரண்டையும் காத்து இரட்சிப்பது அவனுக்குச் சிரமமன்று. மேலும் அவன் மிக உயர்ந்தவன்; மகத்தானவன்.'' (அல்குர்ஆன் 2 : 255)

## துதிச் சொற்கள்

''யார் ஒவ்வொரு தொழுகைக்குப் பின்னரும் 33 தடவை (سُبْحَانَ اللهِ) என தஸ்பீஹும் 33 தடவை (اَلْحَمْدُ لِلّٰهِ) என தஹ்மீதும் 33 தடவை (اللهُ اَكْبَرْ) என தக்பீரும் கூறினால் 99 ஆகிவிடும். முடிவில் 100ஆவதாக தௌஹீத் கலிமாவை ஓதி நிறைவு செய்வாராயின் அவரது பாவங்கள் கடல் நுரையின் அளவு இருந்தாலும் மன்னிக்கப்படும்'' (முஸ்லிம்).

## இக்லாஸ், பலக், நாஸ் ஆகிய ஸூராக்கள்

''நபி ﷺ அவர்கள் பர்ளான தொழுகைக்களைத் தொடர்ந்து பின்வரும் ஸூராக்களை ஓதி வந்துள்ளார்கள். ஸூரதுல் இக்லாஸ், ஸூரதுல் பலக், ஸூரதுந் நாஸ்'' (ஆதாரம்: அபூதாவூத்)

## துஆக்கள்

பர்ளான தொழுகைகளுக்குப் பின் நபி ﷺ அவர்கள் பின்வரும் துஆக்களை ஓதி வந்துள்ளார்கள். நாமும் அவற்றை ஓதிப் பயனடைவோம்.

اَللّهُمَّ اَعِنِّيْ عَلَى ذِكْرِكَ وَشُكْرِكَ وَحُسْنِ عِبَادَتِكَ (ابو داود)

اَللّهُمَّ إِنِّيْ اَعُوْذُ بِكَ مِنَ الْجُبْنِ وَالْبُخْلِ،

وَاَعُوْذُ بِكَ مِنَ اَنْ اُرَدَّ اِلَى اَرْذَلِ الْعُمُرِ

وَاَعُوْذُ بِكَ مِنْ فِتْــنَةِ الدُّنْيَا

وَاَعُوْذُ بِكَ مِنْ عَذَابِ الْقَبْرِ (البخارى)

اَللّهُمَّ إِغْفِرْلِيْ ذُنُوْبِيْ وَخَطَايَايَ كُلَّهَا ، اَللّهُمَّ اَنْعِشْنِيْ ،

وَاجْبُرْنِيْ وَاهْدِنِيْ لِصَالِحِ الْاَعْمَالِ وَالْأَخْلَاقِ إِنَّهُ

لاَ يَهْدِيْ لِصَالِحِهَا وَلاَ يَصْرِفُ سَيِّئَهَا إِلاَّ اَنْتَ (البخارى)

மஃரிப், சுபஹ் தொழுகைகளின் பின்

اَللّهُمَّ اَجِرْنِيْ مِنَ النَّارِ (7 தடவை)

சுபஹ் தொழுகையின் பின்

اَللّهُمَّ إِنِّيْ اَسْأَلُكَ عِلْمًا نَافِعًا وَرِزْقًا طَيِّبًا وَعَمَلاً مُتَــقَبَّلاً (ابن ماجه)

**செயற்பாடு:**

1. தொழுகைக்குப் பின் ஓத வேண்டிய அவ்ராதுகளை மனனமிடுக.
2. ஆயதுல் குர்ஸியை பொருளுடன் மனனமிட்டு ஐவேளை தொழுகைக்குப் பின்னரும் ஓதி வருக.